Register No. | | | | | | | | |

**TA2A**

**6267–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

(Three – year Regular Course)

First Year – Second Semester

LAW OF CONTRACTS – II

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the rights and duties of Bailee on reasonable care and unauthorised use of Bailed Goods.

   ஒப்படைவு செய்யப்பட்ட பொருளின் உரிய கவனம் மற்றும் அங்கீகாரமற்ற பயன்பாடு குறித்த ஒப்படைவு பெறுநரின் உரிமைகள் மற்றும் கடமைகளை விளக்குக.

2. "Who is Consumer"? Analyse and explain the manner under which complaint can be lodged in Consumer Redressal Forum and the procedure to be followed by the Forum.

   நுகர்வோர் என்பவர் யார்? நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் மூலமாக எவ்வாறு புகார் செய்ய வேண்டும் மற்றும் எத்தகைய விசாரணை நடைமுறையை அம்மன்றங்கள் பின்பற்ற வேண்டும் என்பது குறித்து ஆய்ந்து விளக்குக.

3. Analyse the circumstances and consequences on Creation and Revocation of Agent's authority.

   முகவரின் அதிகாரத்தின் உருவாக்கம் மற்றும் முடிவிற்கான சூழ்நிலைகளையும், விளைவுகளையும் ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "Nemo dat quod non habet" – Explain the validity of pledge by Non-owners.

   "உரிமையில்லா ஒருவர் பிறருக்கு உரிமை மாற்றம் செய்யவியலாது" – உரிமையில்லாதவர் வைக்கும் அடகின் செல்லுந்தன்மையை விளக்குக.

5. Describe the option of minor as partner on attaining age of majority.

   உரிய வயதடைந்தபின் கூட்டாளியாக உள்ள இளவரின் விருப்புமுறை குறித்து விளக்குக.

6. "Risk prima facie passes with property" – Explain the transfer of Risk on appropriation of goods under the Sale of Goods Act, 1930.

   "சொத்தினூடே ஊறு வந்து சேரும்" – சரக்கு விற்பனைச் சட்டம், 1930–ன் கீழ் பொருள்கள் ஒதுக்கீடு மூலம் ஏற்படும் ஊறு மாற்றத்தை விவரி.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Rights of Indemnity Holder.

ஈட்டடைவு பெற்றவரின் உரிமைகள்.

(b) Co-Sureties.

இணை பிணையாளர்கள்.

(c) Kaliaperumal v. Visalakshmi AIR 1938 Mad 32.

கலியபெருமாள் எதிர் விசாலட்சுமி AIR 1938 Mad 32.

(d) Agent and Servant.

முகவரும் வேலையாளும்.

(e) Auction Sales.

ஏல விற்பனை.

(f) Partnership by estoppel.

முரண்தடை கூட்டாண்மை.

(g) National Consumer Redressal Commission.

தேசீய நுகர்வோர் குறைதீர் ஆணையம்.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' and 'B' were partners in firm. 'A' retired but did not give public notice of his retirement. 'A' was substituted by new partner 'C'. 'D' became the creditor of partnership subsequently. Which partners can be sued by 'D' on default of payment? Explain.

'அ' மற்றும் 'ஆ' ஒரு நிறுமத்தின் கூட்டாளிகள் ஆவர். 'அ' ஓய்வு பெற்றதை குறித்து பொது அறிக்கை வழங்கவில்லை. 'அ'–விற்கு பதிலாக 'இ' புது கூட்டாளியாக இணைந்தார். 'ஈ' அவர்களுக்கு (நிறுமத்திற்கு) கடன் தருநராக பின்னர் இணைந்தார். தொகை செலுத்தப்பட தவறும் போது, 'ஈ' எந்தக் கூட்டாளிகள் மீது வழக்கிடலாம் – விளக்குக.

9. The creditor filed a suit for recovering the money due. On entering into compromise, the creditor promises friend of the debtor with 10 months time for debt payment. Does Surety get discharged? Explain.

கடன் தருநர் நிலுவை தொகையைப் பெறுவதற்காக வழக்கிட்டார். சமரச முயற்சியில் கடனாளர், கடன் பெறுநரின் நண்பருக்கு தொகை செலுத்துவதற்காக பத்து மாத காலம் அவகாசமளித்தார். பிணையாளர் விடுவிக்கப்படுவாரா? விளக்குக.

10. 'A' authorises 'B' to buy 500 sheep for him. 'B' buys 500 sheep and 200 lambs for one sum of 6000 rupees. Analyse the rights of 'A' over the transaction.

'அ' என்பவர் 'ஆ' என்பவரை 500 ஆடுகள் வாங்க அதிகாரமளித்தார். 'ஆ' ஆறாயிரம் ரூபாய் தொகை கொண்டு 500 ஆடுகளையும், 200 ஆட்டுக் குட்டிகளையும் வாங்கினார். இந்தப் பரிமாற்றத்தின் மீது 'அ'வின் அதிகாரத்தை விளக்குக.

---

Register No. | | | | | | | | |

# TA2B

6268-24

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

First Year – Second Semester

PROPERTY LAW

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ★ ILLUPPUR - 622102 ★

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

## PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Elucidate the remedies open to the owner or occupier of a Dominant Heritage when his right to enjoyment of easement in disturbed.

   தன் வசதியுரிமையை அனுபோகம் செய்வதற்கான உரிமைக்கு இடையூறு செய்யப்படும் பொழுது, வசதியுரிமையைப் பெறும் ஓங்கு சொத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகத்தாருக்கு உரிய பரிகாரங்கள் யாவை என்பதை விளக்கி எழுதுக.

2. The right conferred by Sec. 53A is a right available only to the defendant to protect his possession – Explain.

   53A பிரிவினால் வழங்கப்பட்டிருக்கும் உரிமையானது பிரதி-வாதிக்குத் தனது சுவாதீனத்தைப் பாதுகாத்துக் கொள்ள மட்டுமே கிடைக்கும் ஓர் உரிமையாகும் - விளக்குக.

3. The right of redemption is a statutory right which cannot be fettered by any condition which impedes or prevents redemption – Explain.

   அடைமான மீட்புரிமை ஒரு சட்டரீதியான உரிமை, எந்த நிபந்தனையாலும் அதை தடை செய்தோ அல்லது தடுத்தோ கட்டுப்படுத்த முடியாது - விளக்குக.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What is notice? Explain various kinds of notices.

   அறிவிப்பு என்றால் என்ன? பல்வேறு வகையான அறிவிப்புகளை விளக்குக.

5. Quicquid plantatur solo, solo cedit - discuss.

நிலத்தோடடைந்தவை நிலத்திற்குரியன - விவாதிக்கவும்.

6. Define Property. Explain the essentials of a valid transfer of property.

சொத்து என்பதை வரையறு. ஒரு செல்லத்தக்க சொத்துரிமை மாற்றத்தின் இன்றியமையாத கூறுகளை விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Tenancy at will

விருப்ப முடிவுக் குத்தகை

(b) Tulk -v- Moxhay

டல்க் எதிர் மாக்சே

(c) Class Gift

தொகுதிக் கொடை

(d) Prescription

நீடானுபோக உரிமை

(e) Immovable Property

அசையா சொத்து

(f) Animus Attestandi

சான்றொப்பமிடும் எண்ணம்

(g) Distinguish lease from license

குத்தகையை உரிமத்திலிருந்து வேறுபடுத்துக.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons:

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்:

8. Siva orally grants to Ram the right to catch and carry away fish from his lake for Rs.2,000/-. Is the grant valid?

சிவா என்பவர் வாய்மொழியாக தன் ஏரியிலிருந்து மீன்களை பிடிப்பது மற்றும் எடுத்துச் செல்லும் உரிமைகளை ரூ.2000/-த்திற்கு இராம் அவர்களுக்கு அளிக்கிறார். இந்த அளிப்புச் செல்லுமா?

9. A sells property of B subject to condition that B should not alienate without A's consent. Decide the validity of the condition.

A என்பவர் B என்பவரிடம் தனது சொத்தினை விற்கும் போது தனது இசைவின்றி விற்கக் கூடாது என்ற நிபந்தனையுடன் விற்பனை செய்கிறார். இந்த நிபந்தனையின் செல்லுந்தன்மையை விளக்குக.

10. Giri dedicates to the public the right to use the surface of certain land as pathway. Is this a valid easement?

கிரி தனது நிலத்தின் ஒரு பகுதியை பொதுமக்கள் நடைபாதையாக உபயோகிக்கும் வகையில் கொடுக்கிறார். இது செல்லத்தக்க வசதியுரிமையா?

Register No.

**TA2C**

6314–24

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three-year Regular Course)

First Year – Second Semester

CONSTITUTIONAL LAW – I

MOTHER TERASA LAW COLLEGE
LIBRARY
ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The fundamental right to freedom of speech and expression has in recent times seen expanding horizons"– Discuss.

   "சமீப காலமாக அடிப்படை உரிமைகளில் பேச்சு மற்றும் கருத்தை வெளியிடும் சுதந்திரமானது பரந்த எல்லையுடைதாக பார்க்கப்படுகிறது"– விவாதிக்கவும்.

2. Right to life includes the right to commit suicide. Examine with leading case laws.

   வாழ்வதற்கான உரிமையென்பது தற்கொலை செய்து கொள்வதற்குரிய உரிமையையும் உள்ளடக்கியதேயாகும்–முன்னனி வழக்குகளுடன் ஆராயவும்.

3. Explain the scope and content of right of minorities to establish and administer educational institutions of their choice.

   சிறுபான்மையினரின் விருப்பதிற்கு இணங்க கல்வி நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் நிர்வகித்தல் உரிமையின் நோக்கத்தையும் மற்றும் உள்ளடக்கத்தையும் விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the relation between Directive Principles and Fundamental Rights.

   நெறியுறுத்தும் கொள்கைகளுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை விவாதிக்கவும்.

5. Explain the Fundamental duties under Art. 51-A of the Constitution.

அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்து 51A-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை கடமைகளை விளக்கவும்.

6. "Art. 14 permits reasonable classification but prohibits class legislation". Discuss.

"ஷரத்து 14–ஆனது வகுப்பு வகைப்பாட்டை தடை செய்கிறதே தவிர நியாயமான வகைப்பாட்டை அனுமதிக்கிறது"–விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Right to environment

சுற்றுச்சூழல் உரிமை

(b) Art. 44

உறுப்பு 44

(c) Social and economic charter

சமூக மற்றும் பொருளாதார சாசனம்

(d) A.K. Gopalan v. State of Madras AIR 1950 SC 27

ஏ. கே. கோபலன் – எதிர் –மெட்ராஸ் அரசு AIR 1950 SC 27

(e) Rights of arrested persons

கைது செய்யப்பட்ட நபர்களின் உரிமைகள்

(f) Constitutional validity of reservation in promotions

பணி உயர்வில் இட ஒதிக்கீட்டின் மீது அரசமைப்பின் செல்லும் தன்மை

(g) Doctrine of Eclipse

மறைதல் கோட்பாடு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' company was incorporated in India. The government of India has enacted a law to take over the company. The company 'X' challenged the law on the ground that its fundamental right of Art. 19 (1) (g) was violated. Whether the company 'X' can challenge the constitutional validity of the law? Decide.

'X' இந்தியாவில் தொடங்கப்பட்ட நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தை கையகப்படுத்த இந்திய அரசு ஒரு சட்டம் இயற்றியது. இந்நிறுவனமான 'X' ஷரத்து 19(1)(g) குறிப்பிட்டுள்ள தொழில் செய்யும் அடிப்படை உரிமையை மீறிவிட்டதாக கூறி எதிர்கின்றது. இதில் நிறுவனம் 'X' சட்டத்தின் அரசமைப்பு செல்லும் தன்மை குறித்து எதிர்க்கலாமா? தீர்மானிக்கவும்.

9. The parliament passed the Disturbed Areas Act. The Act conferred wide powers on the police and executive authorities for maintaining law and order. "People Forum" a NGO challenged the Act on the ground of violation of various fundamental rights. Decide.

அமைதியற்ற பகுதிகள் சட்டமானது பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் காவல் துறையினருக்கும் நிருவாகத் துறையினருக்கும் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்ட பரந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதை "மக்கள் அமைப்பு" எனும் அரசு சாரா அமைப்பானது பல்வேறு அடிப்படை உரிமைகளை மீறுவதாக கூறி இச்சட்டத்தினை ஆட்சேபனை செய்கிறது. தீர்மானிக்கவும்.

10. The state of 'X' in Indian Union, has passed a law in furtherance of Art. 39 (b) and (c) of the Constitution of India. The law has been challenged that it violates Art. 14 and Art. 19 of the Constitution. Decide.

இந்திய ஒன்றியத்திலுள்ள 'X' எனும் மாநில அரசு அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பு 39(b) மற்றும் (c)-க்கு இணங்க ஒரு சட்டத்தை இயற்றியது. இச்சட்டமானது அரசமைப்பின் உறுப்பு 14 மற்றும் உறுப்பு 19-ஐ மீறுவதாக கூறி எதிர்க்கப்படுகின்றது. தீர்மானிக்கவும்.

Register No. | | | | | | | | |

**TA2D**

**6269–24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Three–year Regular Course)

First Year – Second Semester

FAMILY LAW – II

MOTHER TERASA LAW COLLEGE LIBRARY ILLUPPUR - 622102.

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. How property of intestate Hanafi Muslim male is divided among his legal heirs?

   உயிலற்ற ஹனாஃபி முஸ்லிம் ஆணின் சொத்து அவரது சட்டப்பூர்வ வாரிசுக்கு எவ்வாறு பிரிக்கப்படுகிறது?

2. Explain the rules of inheritance applicable for Indian Christians as provided under the Indian Succesion Act, 1925.

   இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925 இன் கீழ் வழங்கப்பட்ட இந்திய கிறித்தவர்களுக்குப் பொருந்தக்கூடிய பரம்பரை விதிகளை விளக்குங்கள்.

3. Discuss the right to property provided to women under the Hindu succession Act, 1956.

   இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956ன் கீழ் பெண்களுக்கு வழங்கப்படும் சொத்துரிமை பற்றி விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Who is Mutawalli? What is his status while managing Wakf property?

   முத்தவல்லி என்பவர் யார்? வக்ஃப் சொத்துக்களை நிர்வகிக்கும் போது அவரது நிலை என்ன?

5. What are the various kinds of partition applied to divide the property of Hindu Joint family?

   இந்து கூட்டுக் குடும்பத்தின் சொத்தைப் பிரிக்கப் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான பகிர்வுகள் என்ன?

6. What are the rules of construction of a will? Explain.

உயில் கொள்நிலையின் விதிகள் யாவை? விளக்குக.

PART C — $(5 \times 4 = 20$ marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக:

(a) Dargah

தர்காஹ்

(b) Residuaries

எச்சதாரர்கள்/எஞ்சியோர்

(c) Powers of Karta

கர்த்தாவின் அதிகாரங்கள்

(d) Collaterals

உடன் பிறந்தவர்கள்

(e) Doctrine of Radd

மீட்டளிப்புக் கொள்கை

(f) Son's pious obligation

மகனின் தெய்வீகக் கடமை

(g) Types of wakf

வக்ஃப் வகைகள்

PART D — $(2 \times 6 = 12$ marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A muslim male died leaving behind mother and daughter of a pre–deceased son. Calculate the share entitlement of each legal heir.

ஒரு முஸ்லீம் ஆண் தன் தாய் மற்றும் முன் இறந்த மகனின் மகளை விட்டு இறந்தார். ஒவ்வொரு சட்டப்பூர்வ உரிமையுள்ள பங்குகளை கணக்கிடுக.

9. An intestate christian male died leaving behind his wife, 3 sons of a pre–deceased daughter and a son. Calculate entitled shares of each legal heir.

ஒரு கிறித்தவ ஆண் தனது மனைவி, முன் இறந்த ஒரு மகளின் 3 மகன்களையும் ஒரு மகனையும் விட்டு விட்டு உயிலின்றி இறந்தார். ஒவ்வொரு உரிமையுள்ள சட்டப்பூர்வ வாரிசுகளின் பங்குகளைக் கணக்கிடுக.

10. An intestate Hindu female died leaving behind 2 sons of a pre–deceased son, a son and father. Calculate shares of each entitled legal heirs.

ஒரு இந்து பெண் முன் இறந்த மகனின் 2 மகன்கள், ஒரு மகன் மற்றும் தந்தையை விட்டு உயிலின்றி இறந்தார். ஒவ்வொரு உரிமையுள்ள சட்டப்பூர்வ வாரிசுகளின் பங்குகளைக் கணக்கிடுங்கள்.

---